26.02.2026

OS. No. 73/2025

**PW.2 – ரவி**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

நான் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். விவசாயம் செய்து வருகிறேன். வாதி என் பக்கத்து வீட்டுக்காரர், ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர். பிரதிவாதி ஊர்க்காரர்கள் எங்கள் ஊரில் பெண் எடுத்த வகையில் பழக்கம். பிரதிவாதி எதற்காக கடன் வாங்கினார் என்றால், தன்னுடைய மகளை வெளிநாட்டிற்கு படிக்க வைப்பதற்காகவும், ஒரு சொத்து வாங்கியதற்காக பணம் தேவைப்படுவதாகவும், சுற்றியுள்ள கடன்களை அடைக்கவும் கடன் வாங்கினார். இந்த விவரத்தை யார் எனக்கு சொன்னது என்றால், இருவரும் கடன் பரிமாற்றம் நடக்கும்பொழுது என்னிடம் சொன்னார்கள். எந்த தேதியில் கடன் வாங்கினார் என்று எனக்கு சரியாக ஞாபகமில்லை. ஒரே நாளில் பிரதிவாதி மூன்று கடன்கள் வாதியிடம் வாங்கினார், அதற்கு மூன்று புரோநோட் எழுத சொன்னார், நான் எழுதி கொடுத்தேன். இரண்டு பேரும்தான் சொன்னார்கள். ஆறு மாத காலத்திற்கு வட்டியில்லாமல் திருப்பித்தருவதாக பேச்சு. அவ்வாறு ஆறு மாதத்திற்குள் பணத்தைத் திருப்பித்தர இயலவில்லை என்றால், ஒரு ரூபாய் வட்டி போட்டு தருவதாக சொன்னார். நான் இந்த விவரத்தை புரோநோட்டில் எழுதியுள்ளேன். கடன் வாங்கியபொழுது நான், வாதி, பிரதிவாதி மற்றும் பால் பணம் வாங்க வந்த சந்திரன் ஆகியோர் இருந்தோம். மேலும் சாட்சி மற்றொரு செல்வா என்கிற செல்வராஜ் என்பவர் இருந்ததாக சொல்கிறார். வாதியின் வீட்டில் வைத்து கடன் கொடுக்கப்பட்டது. என்னுடைய பிரமாண வாக்குமூலம் பத்தி 2–இல் " கடந்த 18.08.2023–ஆம் நான் எனது வீட்டில் இருந்தபொழுது, பிரதிவாதி வாதியிடமிருந்து ரூபாய் ../

முப்பத்தைந்து லட்சத்தை ரூபாய் நூற்றுக்கு ரூபாய் 1 வட்டியுடன் திரும்பித்தருவதாக வாக்குறுதி கூறி கடன் பெற்றுக்கொண்டு" என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்திற்கு தேவையான விவரங்களை நான்தான் சொன்னேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தைப் படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தன்னால் மொத்த தொகையையும் ஒரே நேரத்தில் திருப்பிச் செலுத்த முடியாது என்றும், தொகை கொடுக்க கொடுக்க அதற்கேற்றாற்போல் கடனை முடித்துவிடலாம் என்பதால், மூன்று புரோநோட்டாக பிரதிவாதி எழுதி கொடுக்கச் சொன்னதால் அவ்வாறு எழுதி கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் மூன்று கடனுறுதிச் சீட்டுகளும் நான் எழுதிக்கொடுத்தவைதான். மூன்று புரோநோட்டுகளும் ஒரே தேதியில் வெவ்வேறு தொகைகளுக்கு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மூன்று புரோநோட்டுகளில் எழுதி நிரப்பப்பட்ட பேனா மையும், கையெழுத்து போட்ட பேனா மையும் வெவ்வேறாக தெரிகிறது என்றால் சரிதான், பிரதிவாதி தன்னுடைய சட்டைப் பையில் இருந்த தான் வைத்திருந்த பேனாவால் கையெழுத்து போட்டார். பின்னர், சாட்சி புரோநோட் எழுதும்போது சாட்சியாக இருந்த செல்வராஜ் பேனாவை வைத்துதான் கையெழுத்து போட்டார் என்று சொல்கிறார். மூன்று புரோநோட்டுகளிலும் உள்ள கையெழுத்து வெவ்வேறாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல, ஒரே மாதிரிதான் உள்ளது. வா.சா.ஆ.4 பிரதிவாதி பெயரிலுள்ள கிரைய பத்திரத்திலுள்ள பிரதிவாதியின் கையெழுத்தும், மூன்று புரோநோட்டுகளிலுள்ள கையெழுத்தும் வேறுபடுகிறது என்றால், வெவ்வேறு பேனாவால் எழுதியதால் வேறுபடுகிறது. புரோநோட்டில் பிரதிவாதி கையெழுத்து போடவில்லை என்றாலும், மோசடியாக அவர் கையெழுத்தைப் போட்டுள்ளோம் என்றாலும் சரியல்ல. புரோநோட்டிலுள்ள../

கையெழுத்துக்களை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பினால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். ஆனால், பிரதிவாதி என் முன்னிலையில்தான் கையெழுத்து போட்டார். கடனுக்காக பிரதிவாதி வேறொரு பத்திரம் கொடுத்திருந்தார், அது என்ன பத்திரம் என்று பார்த்தால்தான் தெரியும். அந்த பத்திரத்தை வாதியிடம்தான் கொடுத்தார். பிரதிவாதியுடன் கடன் வாங்குவதற்கு சாட்சி செல்வா என்கிற செல்வராஜ்தான் உடன் வந்தார். பிரதிவாதி வாங்கிய கடனுக்கு செல்வராஜ் சாட்சி கையொப்பம் போட்டுள்ளாரா என்றால் போடவில்லை. புரோநோட்டில் நான் ஒரு சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன், சந்திரன் ஒரு சாட்சி கையொப்பம் போட்டுள்ளார். பிரதிவாதியினுடைய மகளும் கணவனும் என்னிடம் வந்தார்களா என்றால் வரவில்லை. வாதிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என்றாலும், அதனால் இந்த கடனை பிரதிவாதிக்கு வாதி கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதிக்கு இவ்வளவு பெரிய தொகையை கடனாக பெறவேண்டிய அவசியமும் தேவையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அதனால், பிரதிவாதிக்கு வாதி எந்தவொரு ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் பிரதிவாதி செல்வராஜ் என்பவரிடம் வாங்கிய கடனுக்காக அவருடைய கிரையப் பத்திரத்தை ஆதரவாக கொடுத்துவைத்திருந்தார் என்றாலும், அந்த கிரையப் பத்திரத்தை வாதிக்கு செல்வராஜ் கொடுக்க வேண்டிய கடனுக்காக வாங்கிக்கொண்டு, செல்வராஜ் கடனை திருப்பிச் செலுத்தாத காரணத்தினால் பிரதிவாதியின் பெயரில் மோசடியாக மூன்று கடனுறுதிச் சீட்டுக்களை உற்பத்தி செய்துகொண்டு, பொய்யான வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் ../

சரியல்ல. என்னுடைய சாட்சி ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சி இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.02.26 16:28:09 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.